பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை-4

2203 2023 **WEDNESDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத் தலைவர் திருமதிதிரௌபதிமுர்மு, தமிழகத்தைசேர்ந்தபாம்புபிடிவீரர்கள் திருவடிவேல் கோபால் - திருமாசிசடையனுக்குபத்ம ஸ்ரீ விருதுகளைவழங்கினார்.

2. தமிழகத்தில் அமையவுள்ளஒருங்கிணைந்த ஜவுளிமண்டலம் மற்றும் ஆடை பூங்காவிருதுநகர் மாவட்டத்தின் வளர்ச்சிக்குஉதவிடும் என்றுபிரதமர் திருநரேந்திரமோடிகூறியுள்ளார்.

3. தமிழகத்தின் வளர்ச்சிக்காகமத்தியஅரசுஎண்ணற்றதிட்டங்களைசெயல்படுத்தியுள்ளதாகதகவல் ஒலிரப்புத்துறை இணையமைச்சர் திருஎல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் வெடிபொருள் சேமிப்புக்கிடங்கில் நேரிட்டவிபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்குதலா 3 லட்சம் ரூபாய் நிவாரணஉதவியைமாநிலஅரசுஅறிவித்துள்ளது.

5. உலகக்கோப்பைதுப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாஒரு தங்கம், ஒருவெண்கலப்பதக்கம் வென்றது.

--*இனிவிரிவானசெய்திகள்* --

குடியரசுத் தலைவர் திருமதிதிரௌபதிமுர்மு, நடப்பாண்டிற்கானபத்மவிருதுகளை இன்று புதுதில்லியில் வழங்கினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இதற்கானநிகழ்ச்சியில், தமிழகத்தைசேர்ந்தபாம்புபிடிவீரர்கள், திருவடிவேல் கோபால் - திருமாசிசடையன் விருதினைபெற்றுக்கொண்டனர்.

இந்தநிகழ்ச்சியில் 6 பத்மவிபூஷன் விருதுகள் உட்பட 106 விருதுகள் வழங்கப்பட்டன.

<<<<>>>>

பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளிமண்டலம் மற்றும் ஆடை பூங்காநாட்டிலேயேமுதல் முறையாகவிருதுநகர் மாவட்டத்தில் தொடங்கப்படவுள்ளது. இதற்கானதொடக்கவிழாசென்னையில் இன்றுமாலைநடைபெற்றது.

முதலமைச்சர் திருமு.க.ஸ்டாலின், ஜவுளித்துறைஅமைச்சர் திருபியூஷ் கோயல் முன்னிலையில் இதற்கானஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தநிகழ்ச்சியில் பேசியதகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திருஎல். முருகன், தமிழகத்தின் வளர்ச்சிக்காகமத்தியஅரசுஎண்ணற்றதிட்டங்களைவழங்கியுள்ளதாகதெரிவித்தார்.

மாநிலஅமைச்சர்கள் திருகேகே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், திரு தங்கம் தென்னரசுஉள்ளிட்டபலர் இந்தநிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இதற்கிடையே, இந்த பூங்காஅமையவுள்ளதன் மூலம், தமிழகத்திற்கு இது சிறப்பானநாள் என்றுபிரதமர் திருநரேந்திரமோடிகூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் தமிழில் இக்கருத்தைபதிவு செய்துள்ளஅவர், விருதுநகர் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு இது உதவிடும் என்றுதெரிவித்துள்ளார். இதன்மூலம் ஏராளமான இளையோர் பயனடைவார்கள் என்றும் திருநரேந்திரமோடிகுறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கோவிட் தொடர்பாகபிரதமர் திருநரேந்திரமோடிதலைமையில் உயர்நிலைஆய்வுக்குழுகூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இந்தநோய் தொற்றினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கைசிலமாநிலங்களில் அதிகரித்துவருவதையடுத்து, இந்தஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமிழகம், மகராஷ்ட்ரா, குஜராத், தெலங்கானா, கேரளா, கர்நாடகாஆகியமாநிலங்கள் கோவிட் பரவலைகட்டுப்படுத்துவதற்கானகண்காணிப்பு நடவடிக்கைகளைதீவிரப்படுத்தவேண்டும் என்றுமத்தியஅரசுகடந்தவாரம் அறிவுறுத்தியிருந்தநிலையில் இந்தஆலோசனைக்கூட்டம் நடைபெறுகிறது.

<<<<>>>>

புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புதுமைதொழில்நுட்பத்தில் இந்தியாமுன்னணியில் உள்ளதாகபிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தம்மைசந்தித்தசர்வதேசஎயிட்ஸ் தடுப்பூசி இயக்கத்திற்கானதலைமைநிர்வாகிடாக்டர் **Mark Feinberg** –வுடன் ஆலோசனைமேற்கொண்டுஅவர் பேசினார்.

கோவிட்-19-க்கான தடுப்பூசிகுறுகியகாலத்தில் உள்நாட்டிலேயேஉற்பத்திசெய்யப்பட்டதைஅவர் சுட்டிக்காட்டினார்.

தடுப்பூசிஉற்பத்திக்கானகட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

பிரதமர் திருநரேந்திரமோடி, மக்களிடையேமனம் திறந்துபேசும் மன் கிபாத் நிகழ்ச்சி, கடந்த 2014-ஆம் ஆண்டுஅக்டோபர் மாதம் முதல் அகில இந்தியவானொலியில் ஒலிபரப்பாகிறது.

இந்தநிகழ்ச்சியின் 100-வது பகுதிஅடுத்தமாதம் ஒலிபரப்பாகவுள்ளது.

இதனையொட்டி, இதுவரைஒலிபரப்பானநிகழ்ச்சிகளிலிருந்துபிரதமர் ஆற்றியஉரையின் முக்கியபகுதிகளைசெய்திப்பிரிவு நாள்தோறும் ஒலிபரப்பிவருகிறது.

இதில், இன்று இடம்பெறுவதுகடந்த 2015-ஆம் ஆண்டுடிசம்பர் மாதம் மன் கிபாத் நிகழ்ச்சியில், பிரதமர் ஆற்றியஉரையின் ஒருபகுதி.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குருவிமலைஅருகேபட்டாசுகுடோனில் நேரிட்டதீவிபத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

இந்தவிபத்தில் 25-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துமருத்துவமனையில் சிகிச்சைக்காகஅனுமதிக்கப்பட்டுள்ளதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, சம்பவ இடத்தைநேரில் பார்வையிட்டமாநிலஅமைச்சர் திருதாமோஅன்பரசன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

எதிர்காலத்தில் இதுபோன்றவிபத்துகள் ஏற்படாம்ல இருப்பதைதடுப்பதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றுஅமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்தவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குதலா 3 லட்சம் ரூபாய் நிவாரணஉதவிவழங்கப்படும் என்றுமுதலமைச்சர் திருமு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்றுஅவர் வெளியிட்டுள்ளஅறிக்கையில், இதில், படுகாயமடைந்தவர்களுக்குதலாஒருலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

காயமடைந்தவர்களுக்குஉயரியசிகிச்சைவழங்கவும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகமுதலமைச்சர் திருமு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<>>>>

சமுதாயவானொலிதொடர்பானபரிந்துரைகளைதொலைத்தொடர்பு ஒழுங்குமுறைஆணையம் இன்றுவெளியிட்டுள்ளது.

இதன்படி, வானொலியைநடத்துவதற்கானஅனுமதிகாலம் 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாகஅதிகரிக்கப்பட்டுள்ளது.

உரிமங்களை புதுப்பிப்பதற்குதற்போதுள்ளநடைமுறையைதொடரலாம் என்றும் அந்தபரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விளம்பரத்திற்காகஅனுமதிக்கப்பட்டகாலஅவகாசமும் ஒருமணிநேரத்திற்கு 7 நிமிடம் என்பதிலிருந்து 12 நிமிடமாகஅதிகரிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பைதுப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாஒரு தங்கம், ஒருவெண்கலப்பதக்கம் வென்றது.

போபாலில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பத்துமீட்டர் பிரிவில், **Sarabjot Singh** தங்கப்பதக்கத்தையும், வருண் தோமர் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

---------------

ஆஸ்திரேலியாவுக்குஎதிரான மூன்றாவதுமற்றும் இறுதிஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 270 ரன் எடுத்தால் வெற்றிஎன்ற இலக்குடன் பேட் செய்துவரும் இந்தியா, சற்றுமுன்வரை13 புள்ளி5ஓவரில், 2 விக்கெட் இழப்பிற்கு, 80ரன் எடுத்துள்ளது.

**>>>>>END<<<<<**